நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் கருவிகளுக்கு 4% வரி ரத்து: விவசாய சங்கம் வரவேற்பு**

First Published : 15 Jul 2011 08:05:55 AM IST

செய்யாறு, ஜூலை 14: வேளாண் கருவிகள், உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளுக்கு 4 சதவீதம் வரி ரத்து செய்ததற்கு தமிழக விவசாய சங்க திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் வி.ஜி.புருஷோத்தமன் வரவேற்றுள்ளார்.

இதுகுறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பீடி, புகையிலை மதுபானங்கள் போதைப் பொருள்கள் மீதான வரியை உயர்த்த வேண்டும். மீனவர் நலனைக்காக்கும் வகையில் டீசல் மீதான விற்பனை வரியை குறைக்க வேண்டும், கச்சாநூல் வரிக்கு மானியம் தொடர வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

**வெங்காயம் அறுவடை தீவிரம்**

First Published : 15 Jul 2011 07:57:15 AM IST

பல்லடம், ஜூலை 14: பல்லடம், பொங்கலூர் பகுதியில், சித்திரைப் பட்ட வெங்காய அறுவடை துவங்கியுள்ளது.

சின்ன வெங்காய சாகுபடியில் நல்ல விலை கிடைத்து வருவதால் பல்லடம், பொங்கலூர் பகுதி விவசாயிகள் இந்த சாகுபடியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். தற்போது அறுவடைக் காலம் என்பதால் கடந்த வாரம் கிலோ 30 ரூபாய்க்கு விற்ற வெங்காயம், வரத்து அதிகரிப்பால் இப்போது கிலோ 25 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தேவை அதிகரித்துள்ளதால் அறுவடை செய்யப்பட்ட உடனேயே காட்டிலேயே வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு விடுகிறது. இன்னும் இரு வாரத்தில் வைகாசிப் பட்ட சின்ன வெங்காய அறுவடை துவங்க இருப்பதால் சின்னவெங்காயம் விலை குறைய வாய்ப்புள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி : வேளாண்மை ஆணையர் ஆய்வு**

First Published : 14 Jul 2011 10:09:14 AM IST

திருச்சி, ஜூலை 13: தமிழக வேளாண்மை ஆணையர் சந்தீப் சக்ஸேனா திருச்சி மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி வயல்களை புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது.

தமிழக வேளாண்மை ஆணையர் சந்தீப் சக்ஸேனா இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, குறுவை, காரிப் பருவ சாகுபடி பரப்பு குறித்தும், திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் நடவு செய்யப்பட்டுள்ள குறுவைப் பயிரின் பரப்பு குறித்தும் ஆய்வு செய்தார்.

குறுவையில் அதிக மகசூல் பெற தொழில்நுட்பங்கள், ஆலோசனைகள் வழங்கி, பயறு வகைகள் சாகுபடி பரப்பினை அதிகரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார்.

பின்னர், அவர் லால்குடி அருகேயுள்ள தாளக்குடி கிராமத்தில் திருந்திய குறுவை நெல் சாகுபடி வயல்களைப் பார்வையிட்டு, விவசாயிகள் சந்திக்கும் இடர்பாடுகள், வருவாயை இரட்டிப்பாக்குவது குறித்து விவாதித்தார்.

உளுந்தங்குடி கிராமத்தில் வேலாயுதம் என்பவரது வயலில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கடலை டிஎம்வி 7 ஆதாரநிலை 1 விதைப் பண்ணை, தத்தமங்கலம் கிராமத்தில் சுப்பிரமணியன் என்பவரது வயலில் அமைக்கப்பட்டுள்ள உளுந்து ஏடிடி. 5 ஆதாரநிலை 1 விதைப் பண்ணை ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மண்ணச்சநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், விதைச் சுத்திகரிப்பு நிலையம் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, சென்னை வேளாண்மை ஆணையரக வேளாண்மைக் கூடுதல் இயக்குநர் (மத்திய திட்டங்கள்) டி. கோபாலகிருஷ்ணன், திருச்சி வேளாண்மை இயக்குநர் ஜெ. சேகர், வேளாண்மைத் துணை இயக்குநர் (மாநிலத் திட்டங்கள்) ச. சபா நடேசன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) கே. பால்ராஜ், மண்ணச்சநல்லூர் உதவி இயக்குநர் ஆர். சந்தானகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விவசாய பொருள்களை மானிய விலையில் வழங்க வலியுறுத்தல்**

First Published : 15 Jul 2011 07:50:58 AM IST

மஞ்சூர், ஜூலை 14: விவசாயப் பொருள்களை மானிய விலையில் வழங்க தோட்டக் கலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயத் தொழிலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

÷இது குறித்து தமிழக முதல்வருக்கு அதன் தலைவர் கே.எம்.ஆரி அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

÷நீலகிரி மாவட்ட கிராமப்புறங்களில் அதிகளவு விவசாயிகள் மலைகாய்கறி விவ சாயம் செய்து வருகின்றனர். விவசாயிகளுக்குத் தேவையான விதை, விவசாய கரு விகள் 50 சதவீத மானியத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயக் கருவிகளுக்கான மானியம் 25 சதவீதமாக குறைக்கப்பட்டது. மேலும், விவசாயத்திற்குத் தேவையான உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு மானியம் இல்லாததால் அவற்றை வெளிச்சந்தையில் வாங்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு, பட்டாணி, கேரட் உள்ளிட்ட மலைகாய்கறி பயிர்களுக்கு அடிக்கடி பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதாலும், உரமிடுவதாலும் அதிகளவில் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. இதனால் பயிர்கள் மகசூலைத் தரும் சமயத்தில் விவசாயிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

தற்போது ஆடிப் பட்ட விவசாயத்திற்குத் தேவையான விதை, உரம் ஆகியவற்றை வாங்க விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில் தோட்டக்கலைத் துறை மூலம் மானிய விலையில் விதைகள் வழங்க காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே விவசாயிகள் நலன் கருதி உடனடியாக விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் விவசாய இடுபொருள்கள், கருவிகளை 50 சதவீத மானியத்தில் வழங்க வேண்டும்.

**மா, மஞ்சள், வாழை சாகுபடிக்கு மானியம்**

First Published : 15 Jul 2011 07:55:42 AM IST

காங்கயம், ஜூலை 14: காங்கயம் வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் பழப் பயிர்கள் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டிற்கு ரூ.11.50 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் தோட்டக் கலை இயக்குநர் மு.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருப்பது:

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ், புதிய மாந்தோப்புகள் அமைக்கும் விவசாயிகளுக்கு முதலாம் ஆண்டிற்கு ஹெக்டேருக்கு ரூ.9,900 வீதமும், இரண்டாம் ஆண்டு பராமரிப்பதற்கு ஹெக்டேருக்கு ரூ.3,300 வீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

உயர் அடர் நடவு மூலம் புதிய மாந்தோப்புகள் அமைக்கும் விவசாயிகளுக்கு முதலாம் ஆண்டிற்கு ஹெக்டேருக்கு ரூ.24 ஆயிரம் வீதமும், இரண்டாம் ஆண்டு பராமரிப்பதற்கு ஹெக்டேருக்கு ரூ.8 ஆயிரம் வீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

தென்னையில் கோகோ ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் நோக்கில், புதிதாக கோகோ சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரம் வீதமும், கோகோ சாகுபடி

செய்துள்ள விவசாயிகளுக்கு இரண்டாம் ஆண்டு பராமரிப்புக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.4 ஆயிரம் வீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும், நெல்லித்தோட்டம் இரண்டாம் ஆண்டு பராமரிப்புக்காக ஹெக்டேருக்கு ரூ.3,500 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

மஞ்சள் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க, மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரத்து 500 வீதமும், வாழை சாகுபடிப் பரப்பை அதிகரிக்க வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.16 ஆயிரத்து 880 வீதமும், திசுவாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.31 ஆயிரத்து 200 வீதமும் மானியம் வழங்கப்படுகிறது. மானியத்தொகை இடுபொருட்களாகவும், இடுபொருட்கள் போக மீதமுள்ள தொகை காசோலையாகவும் வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தில் சேர, காங்கயம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் தங்களது பெயர்களைப் பதிவு செய்து பயன்பெறலாம்.

தினமலர்


**உணவுப் பொருள் பணவீக்கம் 8.31 சதவீதமாக உயர்வு**

ஜூலை 15,2011,00:10

---

புதுடில்லி: நாட்டின், உணவுப் பொருள் பணவீக்கம் ஜூலை 2ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 8.31 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 7.61 சதவீதமாக குறைந்து காணப்பட்டது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள் 13.54 சதவீதமும், பால் விலை 12.39 சதவீதமும் அதிகரித்திருந்தது.

மேலும், புரதச் சத்து நிறைந்த பொருள்களான, முட்டை, இறைச்சி மற்றும் மீன்கள் ஆகியவற்றின் விலை ஆண்டுக்கணக்கில், 11.95 சதவீதம் உயர்ந்திருந்தது.உணவு தானியங்கள், காய்கறிகள், வெங்காயம் போன்றவற்றின் விலை மிகவும் அதிகரித்து காணப்பட்டது. ஆண்டுக்கணக்கில் ஒப்பிடும் போது, இவ்வாரத்தில், பருப்பு வகைகள் விலை 5.40 சதவீதமும், காய்கறிகள் விலை 2.25 சதவீதமும் அதிகரித்திருந்தது.




குறிப்பாக, வெங்காயத்தின் விலை, 30.72 சதவீதமாக மிகவும் உயர்ந்திருந்தது.பருப்பு வகைகள் (8.46 சதவீதம்), உருளைக்கிழங்கு (2.56 சதவீதம்) ஆகியவற்றின் விலை ஓரளவிற்கு குறைந்திருந்தது. முக்கிய உணவுப் பொருள்களின் பணவீக்கம் 11.58 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் 11.56 சதவீதமாக குறைந்து இருந்தது. மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், பணவீக்கத்தில் முக்கிய உணவுப் பொருள்களின் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.உணவு சாராத பொருள்கள் பிரிவின் கீழ், ஆண்டுக்கணக்கில், நூலிழை விலை 34 சதவீதமும், எரிபொருள் மற்றும் மின்சாரம் 11.89 சதவீதமும், எரிவாயுவின் விலை, 14.58 சதவீதமும் அதிகரித்திருந்தது. மொத்தத்தில், உணவு சாராத முக்கிய பொருள்களின் பணவீக்கம், 17.69 சதவீதத்திலிருந்து, 15.20 சதவீதமாக குறைந்துள்ளது.

**குறுவை நெல் விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் சேரலாம்: கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,00:55 IST

கடலூர் : குறுவை நெல் விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் சேரலாம் என கலெக்டர் அமுதவல்லி கூறியுள்ளார்.

அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தேசிய வேளாண்மை காப்பீடு மூலம் செயல்படுத்தப்படும் பயிர் காப்பீடு திட்டம் குறித்த அறிவிக்கை வரப்பெற்றுள்ளது. அதன்படி 2011ம் ஆண்டு நெல் முதல் பருவ சாகுபடி (குறுவை மற்றும் சொர்ணவாரி பட்டம்) செய்துள்ள கடன் பெறாத விவசாயிகள் இன்று (15ம் தேதி) வரை இத்திட்டத்தில் சேரலாம். கடன் பெறும் விவசாயிகள் வரும் 31ம் தேதி வரை சேரலாம். குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இயற்கை இடர்பாடுகளின் காரணமாக உத்திரவாத மகசூல் அளவு குறைந்தால் நட்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மத்திய, மாநில அரசுகளின் மானியம் போக குறுவை சொர்ணவாரி சாகுபடி விவசாயிகள் ஏக்கருக்கு குறைந்த பிரிமியமாக 153 ரூபாய் செலுத்தினால் போதும்.

இதற்கான காப்பீடு மதிப்புத் தொகை 13 ஆயிரத்து 556 ரூபாய் ஆகும். மேலும், விவசாயிகள் தங்களின் விருப்பத்தின் பேரில் கூடுதல் பிரிமியமாக 132 ரூபாய் செலுத்தினால் கூடுதல் தொகைக்கு காப்பீடு செய்யலாம். எனவே, பயிர் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் மொத்தத்தில் ஏக்கருக்கு 285 ரூபாய் செலுத்தினால் 22 ஆயிரத்து 592 ரூபாய்க்கு காப்பீடு செய்யலாம். எனவே, கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் அருகில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வர்த்தக வங்கிகளை அணுகி இத்திட்டத்தில் சேரலாம் என கூறப்பட்டுள்ளது.

**வாழை வரத்துக்குறைவு விலை திடீர் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,00:40 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடப்பு வாரம் வாழை வரத்து குறைந்தும், சென்ற வாரத்தை காட்டிலும் விலை அதிகரித்தது. கோபி சுற்று வட்டார பகுதியில் உற்பத்தியாகும் வாழைப்பழங்கள், கோபி வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. நடப்பு வாரம் 2,500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. இதில், கதளி கிலோ 25 ரூபாய், நேந்திரம் கிலோ 18 ரூபாய், செவ்வாழை தார் 600 ரூபாய், தேன் வாழை 340 ரூபாய், ரொபஸ்ட்ரா 250 ரூபாய், பூவாழை 260 ரூபாய், மொத்தன் 220 ரூபாய், பச்சை நாதன் 235 ரூபாய் விற்கப்பட்டது. சென்ற வாரத்தை விட வாழை வரத்து குறைந்து இருந்தது. சென்ற வாரத்தை விட விலை அதிகரித்து காணப்பட்டது. மொத்தம் 2.50 லட்சம் ரூபாய் மதிப்பிலான வாழை விற்பனை செய்யப்பட்டது.

**தண்ணீர் இல்லாததால் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் இழப்பு**

பதிவு செய்த நாள் : ஜுலை 14,2011,23:06 IST

திருப்போரூர் : சிறுதாவூர் ஊராட்சிக்கு சொந்தமான கொய்யா, மாந்தோப்புகள், போதிய பராமரிப்பின்றி, வீணாகி வருகிறது. இதனால், ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய், இழப்பு ஏற்பட்டுள்ளது. திருப்போரூர் அடுத்த சிறுதாவூரில், ஊராட்சிக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் பரப்பளவில் கொய்யா தோப்பும், மாந்தோப்பும் உள்ளன. 35 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட இந்த தோப்புகளை, ஊராட்சி நிர்வாகம் பராமரித்து வருகிறது. தோப்பில், கிணறு அமைக்கப்பட்டு, மின் மோட்டார் மூலம் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. 350 கொய்யா மரங்களும், 200 மாமரங்களும் செழிப்பாக வளர்ந்துள்ளன.

ஊராட்சி நிர்வாகத்தின் சார்பில், ஒவ்வொரு ஆண்டும் இந்த கொய்யா, மாந்தோப்புகள் ஏலம் விடப்படுகிறது. இதன் மூலம், ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்தது. சில ஆண்டுகளாக, ஊராட்சி நிர்வாகம், இந்த தோப்புகளை கண்டு கொள்ளாததால், பராமரிப்பின்றி மா, கொய்யா மரங்கள் காய்ந்து, அவற்றின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. கடந்த 10 ஆண்டுகளாக, தோட்டத்தில், காய்கள் சரி வர காய்க்காததால், ஏலம் விடுதல் நின்றுபோனது. இதனால், ஊராட்சிக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

சிறுதாவூர் கிராமத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கோவிந்தசாமி கூறியதாவது: சிறுதாவூர் கிராமத்திற்கு, வருவாயை கொடுத்துவந்த கொய்யா, மா தோப்புகள் பராமரிப்பு இல்லாமல், கொஞ்சம் கொஞ்சமாக காய்ந்துவிட்டன. பட்டுப்போன மாந்தோப்பை மீட்டு, மீண்டும் வருவாயை பெருக்க வேண்டுமென, கிராம சபை கூட்டங்களில், குரல் கொடுத்து தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். ஆனால், இதற்கான நடவடிக்கை தான் இல்லை. ஊராட்சி நிர்வாகத்தினர், மாந்தோப்பை முறையாக பராமரிக்க முன் வரவேண்டும். பட்டுப்போன மா, கொய்யா மரங்களை அகற்றிவிட்டு, தோட்டக்கலை பயிர்களான காய்கறி, தர்பூசணிகளை சாகுபடி செய்யலாம் என்றார். ""ஊராட்சியில், போதுமான நிதி இல்லாததால், பராமரிக்க முடியவில்லை. இதனால், வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. ஒன்றிய நிர்வாகத்திடம் சுற்றுச் சுவர் அமைத்து தர கோரியுள்ளோம். பழைய கிணறு சிதிலமடைந்ததால்,தோப்பை பராமரிக்க வசதியாக, புதிதாக கிணறு அமைத்துள்ளோம். காலியாக உள்ள இடங்களில், பழ மரக்கன்றுகளை நட திட்டமிட்டுள்ளோம்," என, ஊராட்சி தலைவர் விமலா கூறினார்.

**சிறு, குறு விவசாயிகள் விபரங்கள் சேகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2011,21:29 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் வேளாண் துறை மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் விபரங்கள் சேகரிக்கும் பணி இன்று துவங்குகிறது. பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் அறிக்கை: வடக்கு ஒன்றியத்தில் சிறு, குறு விவசாயிகளின் விபரங்கள் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயின் பெயர், முகவரி, வயது, மொபைல்போன் எண், வங்கி கணக்கு எண், கல்வி தகுதி, நில அளவை எண், பரப்பு, பயிரிடப்பட்டுள்ள சாகுபடி விபரம், நீர் ஆதார விபரம், பண்ணைக்கருவிகள், கால்நடைகளின் எண்ணிக்கை, தற்போது விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருவாய், இதர தொழில் வருவாய் ஆகிய புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படும்.

தற்போது பெறப்படும் வேளாண் உற்பத்தி மற்றும் வருமானத்தை இரண்டு மடங்காக பெருக்க விவசாயிகளிடம் இருந்து ஆலோசனைகளும், புள்ளி விபரங்களும் சேகரிக்கப்படும். புள்ளி விபரங்கள் அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களால் கிராமத்திற்கு நேரில் வந்து சேகரிக்கப்படும். வடக்கு ஒன்றியத்தில் இன்று 15ம் தேதி விவசாயிகள் சந்திப்பு துவங்குகிறது. வரும் 30ம் தேதி வரையிலும் ஒவ்வொரு கிராமமாக விவசாயிகளை சந்தித்து புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. விவசாயிகள் தேவையான விபரங்களையும், ஆவணங்களையும் தயாராக வைத்திருக்க வேண்டும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பயிர் சேதம்: விவசாயிகள் செய்ய வேண்டியது என்ன?**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2011,21:21 IST

ஆனைமலை : வன விலங்குகளால் பயிர்கள் சேதம் அடைந்தால் விவசாயிகள் செய்யவேண்டியது குறித்து வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். வனச்சரக அலுவலர் வீரமணி கூறியதாவது: வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் யானைக்கு பிடித்தமான சோளம், வாழை, தென்னை போன்றவைகள் அதிக அளவில் பயிரிடப்படுவதால் அவை விவசாய நிலங்களை தேடிவருகின்றன. யானைகள் பயிர்களை சேதப்படுத்தினால் விவசாயிகள் முதலில் வனச்சரக அலுவலருக்கு தகவல் தெரிவிக்கவேண்டும். விவசாயிகள் முதலில் விவசாயப்பயிர்கள் சேதமானது குறித்து விண்ணப்பம் வனச்சரக அலுவலருக்கு கொடுக்கவேண்டும்.

விண்ணப்பத்தில் நிலப்பரப்பின் அளவு, சேதமடைந்த அளவு, விவசாய நிலம் யாருடையது, சேதப்படுத்தப்பட்ட பகுதியின் உரிமையாளருடன் சேதமடைந்த பகுதியும் சேர்த்து போட்டோ ஆகியவை இணைக்கவேண்டும். கிராம நிர்வாக அலுவலரிடம் நில உரிமை சான்றும், சேதப்பகுதியில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான சான்றும் கிராம நிர்வாக அதிகாரியிடம் பெற்று இணைக்கவேண்டும். வேளாண்மைத்துறையிடம் இருந்து சேதமதிப்பு குறித்து மதிப்பீட்டு சான்றிதழ் தர வேண்டும்.

வருவாய்துறை அதிகாரிகளிடம் இருந்து நஷ்ட ஈடு ஏதும் வாங்கவில்லை என்பதற்கான சான்று இணைக்கவேண்டும். மேலே தெரிவித்துள்ளவற்றை நஷ்ட ஈடு கோரும் விண்ணப்பத்துடன் சேதப்படுத்திய மூன்று நாட்களுக்கும் வனச்சரக அலுவலரிடம் சமர்ப்பிக்கவேண்டும். தவறும் பட்சத்தில் ஒருவார காலத்திற்குள் கொடுக்க வேண்டும். விவசாயிகள் இவற்றை சமர்ப்பிக்கும்போது வனத்துறை உயர் அதிகாரிகள் மூலம் நஷ்ட ஈடு பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றார்.

**முதுமலையில் 200 ஹெக்டரில் மூங்கில் விதை :யானைகளின் உணவு தேவைக்கு நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2011,22:37 IST

கூடலூர் : முதுமலையில் யானை உள்ளிட்ட வன விலங்குகளின் எதிர்கால உணவு தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 200 ஹெக்டர் பரப்பளவில் 500 கிலோ மூங்கில் விதைகளை வனத்துறையினர் விதைத்தனர். யானைகளின் முக்கிய உணவான மூங்கில்களில் நடவு செய்த 40 ஆண்டுகளுக்கு பின்பு பூ பூத்து முழுமையாக அழிந்து விடுவது வழக்கம். நீலகிரி மாவட்டம் கூடலூர் வனக்கோட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பெருமளவிலான மூங்கில்களில் பூ பூத்து அவை அரிசியாக மாறி உதிர்ந்து அழிந்து விட்டன. மூங்கில்கள் பெருமளவில் குறைந்து விட்டதால், யானைகளுக்கு கடும் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யானைகள் உணவுக்காக குடியிருப்பு பகுதிகளை நோக்கி வருவதும், விவசாய நிலங்களின் புகுந்து விளை பயிர்களை சேதப்படுத்துவம் தொடர்கிறது.

முதுமலை சுற்றுப்புற பகுதிகளில் சில பகுதிகளில் மட்டும் குறிப்பிட்ட அளவுக்கு மூங்கில்கள் உள்ளன. இந்த மூங்கிலும் குறைந்து விட்டால், எதிர்காலத்தில் உணவுக்காக, யானை- மனித மோதல்கள் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.
யானைகளின் எதிர்கால மூங்கில் தேவைக்கான பணிகளை முதுமலை புலிகள் காப்பகம் மேற்கொண்டு வருகிறது. முதுமலை புலிகள் காப்பகத்தில் வனத்துறை சார்பில் 200 ஹெக்டர்

பரப்பளவில் 500 கிலோ மூங்கில் விதைகள் (மூங்கில் நெல் ) விதைக்கப்பட்டுள்ளன. "இவை 10 ஆண்டுகளில் ஓரளவு வளர்ச்சி பெற்று யானைகளின் உணவு தேவையை பூர்த்தி செய்யும்,' என எதிர்பார்க்கப்படுகிறது. முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குனர் அமீர்ஹாஜா கூறுகையில்,""மூங்கில் பெருமளவில் சாய்ந்து விட்டதால் எதிர் காலத்தில் யானைகளின் உணவு தேவையை பூர்த்தி செய்ய முதுமலையில் மூங்கில் நெல்களை விதைக்கும் பணிகள் 200 ஹெக்டர் பரப்பில் நடந்துள்ளது. இதன் பரப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

**ஆடு வளர்ப்பு தீவிரம் விவசாயிகளுக்கு பயிற்சி : அரசு உத்தரவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 14,2011,21:17 IST

காரைக்குடி : பசு,ஆடு வளர்ப்பை ஊக்கப்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்த வேண்டுமென,வேளாண் துறை அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி, காளையார்கோவில், சிங்கம்புணரி பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெள்ளாடு ஆடுகள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன. தவிர, ராமநாதபுரம் மாவட்ட பகுதியில் செம்மறி ஆடுகள் வளர்ப்பும் அதிகளவு உள்ளன. தற்போது, புதிதாக பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க., அரசு தேர்தல் அறிக்கையில் கூறியது போல், குடும்பத்திற்கு பசுமாடு, ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தீவிர பணியில் ஈடுபட்டுள்ளன.

இத்திட்டத்தை செப்., 15ம் தேதி துவங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. முன்னோடியாக, மாவட்டந்தோறும் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள், ஆடுகளின் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பு பணியில் வேளாண் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத்தை பொறுத்தவரை ஆடு வளர்ப்பில் விவசாயிகள் அதிகளவு ஆர்வம் செலுத்தாததால் இத்தொழிலை ஊக்கப்படுத்தும் பணியில் வேளாண் துறை அதிகாரிகள் இறங்கியுள்ளனர். முதற் கட்டமாக, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் விவசாய தொழிலாளிகள், ஆடு வளர்ப்போர், கூலி தொழிலாளிகள் என அனைவரையும் அழைத்து ஆடு வளர்ப்பிற்கு தேவையான உதவிகளையும், பசுந் தீவன உற்பத்தி பற்றியும் பயிற்சி அளிக்க முடிவு செய்துள்ளனர்.

வேளாண் உதவி பேராசிரியர் ஒருவர் கூறுகையில், "" புதிய அரசு மாவட்டந்தோறும் பசுமாடு, ஆடு வளர்ப்பை ஊக்குவிக்க பயிற்சி வகுப்பு நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் பருவ நிலைக்கு ஏற்ப ஆடுகளை எவ்வாறு வளர்ப்பது, நோய் மற்றும் தடுப்பு முறைகள், மாவட்டத்திற்கு தகுந்தவாறு ஆடுகளை வளர்ப்பது உள்ளிட்ட ஆலோசனை

வழங்கப்படவுள்ளன. மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள் பங்கேற்க உள்ளனர். " என்றார்.

## *வளர்ச்சி வாய்ப்புகள் நன்றாக உள்ளதால் பால்வளத் துறை நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு அதிகரிப்பு*



*கிரண் காப்தா சோம்வான்ஷி*

*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*

*வளர்ச்சி வாய்ப்புகள் நன்றாக உள்ளதால், பால்வளத் துறை நிறுவனங்களின் பங்குகளில் சில்லரை முதலீட்டாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் முதலீடு அதிகரித்து வருகிறது.*

*கடந்த 12 மாதங்களில்...*

*இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், கடந்த 12 மாதங்களில் மும்பை பங்கச் சந்தையின் குறியீட்டு எண் 'சென்செக்ஸ்' 2.4 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ள நிலையில், குவாலிட்டி டெய்ரிஸ், ஹட்சன் அக்ரோ, வாடிலால் இண்டஸ்ட்ரீஸ், உமாங் டெய்ரிஸ் உள்ளிட்ட பால்வளத் துறை நிறுவன பங்குகள் விலை மிகவும் அதிகரித்துள்ளது.*

*அரியானாவைச் சேர்ந்த குவாலிட்டி டெய்ரிஸ் நிறுவனம், இந்துஸ்தான் யூனி லீவர்,*

நெஸ்லே, மதர் டெய்ரி, வாடிலால் போன்ற முன்னணி நுகர்பொருள் துறை நிறுவனங்களுக்கு பால் மற்றும் பால் பொருள்களை வழங்கி வருகிறது. கடந்த நான்கு காலாண்டுகளாக இந்நிறுவனத்தின் நிதி நிலை முடிவுகள் மிகவும் நன்றாக உள்ளன.

பங்குகளின் மதிப்பு

இந்நிறுவன பங்குகளின் சந்தை மதிப்பு (மார்க்கெட் கேப்பிட்டலிசேஷன்) ரூ.2,800 கோடியாக உள்ளது. சென்ற ஒரு மாத காலத்தில் 'சென்செக்ஸ்' 0.8 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ள நிலையில், இந்நிறுவனத்தின் பங்கின் விலை 23 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த 12 மாதங்களில் 'சென்செக்ஸ்' 2.4 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், இதன் பங்குகள் மதிப்பு 66.1 சதவீதம் அதிகரித்துள்ளது.

இத்துறையைச் சேர்ந்த உமாங் டெய்ரிஸ் பங்கின் விலை சென்ற ஒரு மாத காலத்தில் வியக்கத்தக்க வகையில் 61.2 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த மூன்று காலாண்டுகளாக இந்நிறுவனத்தின் செயல்திறன் மிகவும் சிறப்பாக உள்ளது.

ஹட்சன் அக்ரோ நிறுவனத்தின் பங்கின் விலை சென்ற ஓர் ஆண்டு காலத்தில் 89 சதவீதம் உயர்ந்துள்ளது. மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், நிறுவனத்தின் செயல்திறன் சற்று மந்தமாக இருந்த நிலையிலும், அதற்கு முந்தைய மூன்று காலாண்டுகளில் நிதி நிலை முடிவுகள் நன்றாக உள்ளன.

ஐஸ்கிரீம்

ஐஸ்கிரீம் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் வாடிலால் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பங்குகளை வாங்குவதில் கடந்த ஆறு மாதங்களாக முதலீட்டாளர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஆறு மாத காலத்தில் 'சென்செக்ஸ்' 5.7 சதவீதம் சரிவடைந்துள்ள நிலையில், இந்நிறுவனத்தின் பங்கின் விலை 26 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்நிறுவனம், உற்பத்தி திறனை அதிகரித்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் வருவாயை 26 சதவீதம் அதிகரிக்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. பால்வளத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்குகளுக்கு தேவைப்பாடு அதிகரித்துள்ள நிலையில், ஐதராபாத்தைச் சேர்ந்த ஹெரிடேஜ் ஃபுட்ஸ் நிறுவனத்தின் பங்கின் விலை மட்டுமே குறைந்துள்ளது.

தனிநபர் பயன்பாடு

வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தனிநபர் பால் பயன்பாடு குறைவாக உள்ளது. இந்நிலையில், நம் நாட்டில் மக்களின் வாழ்க்கை முறை மாறி வருகிறது. உடல் ஆரோக்கியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. மேலும், தனிநபர் செலவிடும் வருவாய் உயர்ந்துள்ளது. மத்திய அரசின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், பாரத் நிர்மாண் திட்டம் போன்றவற்றால்

கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டு வருகிறது. இதனையடுத்து, பால் மற்றும் பால் பொருள்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

ஆண்டுக்கு 11 கோடி டன்

இந்தியாவில் தற்போது ஆண்டுக்கு 11 கோடி டன் பால் பயன்படுத்தப்படுகிறது. இது, 2021–22–ஆம் நிதி ஆண்டிற்குள் 17.20 கோடி டன்னாக உயரும் என தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து, இத்துறையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு வளமான வர்த்தக வாய்ப்பு உருவாகிறது.

எனவே, இத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தை, தர நிர்ணய அமைப்புகள் மேலும், உயர்த்தும் என பல பங்கு வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## உற்பத்தி குறைந்ததால் காங்கயத்தில் கொப்பரை தேங்காய் விலை சரிவில் இருந்து மீண்டது



காங்கயம் பகுதியில் உள்ள தேங்காய் பருப்பு உலர்த்தும் களங்களில் பருப்பு உலர்த்தப்படுவதை படத்தில் காணலாம்.

காங்கயம்,ஜூலை.15–

உற்பத்தி குறைந்ததால், காங்கயத்தில் கொப்பரை தேங்காய் விலை சரிவில் இருந்து மீண்டது.

எண்ணெய் உற்பத்தியில் முதலிடம்

இந்தியாவில் காங்கயம் தான் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. முன்பு கொச்சி முன்னிலை வகித்தது. இப்போது கொச்சியை பின்னுக்கு தள்ளி விட்டு காங்கயம் முதலிடம் பிடித்து உள்ளது.

காங்கயம், வெள்ளகோவில், முத்தூர் ஆகிய பகுதிகளில் 100 க்கும் மேற்பட்ட எண்ணெய் ஆலைகளும், 1500 க்கும் மேற்பட்ட தேங்காய் உடைத்து பருப்பு உலர்த்தும் களங்களும் உள்ளன. இந்த தொழிலில் மட்டும் சுமார் 25 ஆயிரம் தொழிலாளர்கள்

ஈடுபட்டு உள்ளனர். தினமும் ஒரு கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெறுகிறது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

பொள்ளாச்சி, தேனி, கம்பம், நெகமம் மற்றும் மைசூர், கேரள போன்ற பகுதிகளில் இருந்து தினசரி தினமும் 300 லோடு தேங்காய் லாரிகள் மூலம் கொண்டு வரப்பட்டு உடைக்கப்படுகிறது. அவற்றில் இருந்து பருப்பு எடுக்கப்பட்டு களங்களில் போட்டு உலர்த்தப்படுகிறது. உலர்த்தப்பட்ட பருப்பு, எண்ணெய் ஆலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் குஜராத், மும்பை, டெல்லி, கொல்கத்தா, கர்நாடகா மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதே போல தேங்காய் பருப்பு பெங்களூர், கொச்சி, புதுச்சேரி போன்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் தேங்காய் பருப்பு, எண்ணெய் விலை அடிக்கடி ஏற்ற, இறக்கத்தில் காணப்படுகிறது.

விலை சரிந்தது

கடந்த 2 மாதத்துக்கு முன்பு ஒரு கிலோ தேங்காய் பருப்பு ரூ.70 ஐ தாண்டியது. இதே போல 15 கிலோ கொண்ட ஒரு டின் எண்ணெய் விலை ரூ.1500 க்கு மேல் விற்பனை ஆனது. ஆனால் கடந்த ஒரு மாத காலமாக விலை மளமளவென சரிந்தது. ஒரு கிலோ பருப்பு ரூ.45 க்கு இறங்கியது. கடந்த வாரம் ஒரு கிலோ பருப்பு ரூ.48 ஆகவும், எண்ணெய் 15 கிலோ கொண்ட டின் ரூ.1050 ஆகவும் இருந்தது. ஆனால் விலை படிப்படியாக உயர்ந்து கடந்த 2 நாட்களில் சரிவில் இருந்து மீண்டது.

மீண்டும் விலையேற்றம்

நேற்று ஒரு கிலோ தேங்காய் பருப்பு ரூ.54 ஆகவும், எண்ணெய் 15 கிலோ டின் ரூ.1200 ஆகவும் உயர்ந்தது. இந்த விலை உயர்வு குறித்து உற்பத்தியாளர்கள் கூறியதாவது:– வடமாநிலங்களில் பாமாயில் இறக்குமதி செய்ததால் தேங்காய் எண்ணெய் விலை கடந்த 2 மாதங்களில் சரிந்து இருந்தது. பொதுவாக ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தேங்காய் உற்பத்தி அதிகரித்து சீசன் தொடங்கி விடும். இதனால் வரத்து அதிகரிதது பருப்பு, எண்ணெய் விலை குறைந்து போனது. இந்த நிலை இப்படியே ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும். இந்த விலையேற்றத்துக்கு பருவநிலை தான் காரணம்.. பருப்பு உலர்த்துவதற்கு போதிய வெயில் இல்லாத நிலை, மேகமூட்டம், மழை தூறலால் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் விலை உயர்ந்து உள்ளது, ஆகஸ்டு மாத இறுதியில் விலை மேலும் உயர வாய்ப்பு இருக்கிறது.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பழங்கள், பால் விலை உயர்வால்

# உணவு பொருள் பணவீக்கம் 8.31 சதவீதமாக உயர்ந்தது

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி



பழங்கள் மற்றும் பால் விலை உயர்வால், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் உணவு பொருள் பணவீக்கம் ஜூலை 2–ந்தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 8.31 சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 7.61 சதவீதமாக இருந்தது.

### முட்டை – மீன்

கணக்கிடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பழங்கள் மற்றும் பால் விலை முறையே 13.54 சதவீதம் மற்றும் 12.39 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, இறைச்சி, மீன் உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 11.95 சதவீதம் அதிகரித்துள்ளது.

தானியங்கள் (5.40 சதவீதம்), காய்கறி (2.25 சதவீதம்), வெங்காயம் (30.72 சதவீதம்) விலையும் உயர்ந்துள்ளது. அதேசமயம், பருப்பு வகைகள் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 8.46 சதவீதம் மற்றும் 2.56 சதவீதம் குறைந்துள்ளது.

கணக்கிடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 11.56 சதவீதத்திலிருந்து 11.58 சதவீதமாக உயர்ந்துள்ளது. பொதுப் பணவீக்கத்தை கணக்கிடும் மொத்த விலை குறியீட்டு எண்ணில் இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. உணவு சாரா பொருள் பணவீக்கம் 17.69 சதவீதத்திலிருந்து 15.20 சதவீதமாக குறைந்துள்ளது.

நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை கடந்த 15 மாதங்களில் 10 முறை உயர்த்தி உள்ளது. இதன் தாக்கத்தால், நாட்டின் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது.

### வட்டி விகிதங்கள்

இந்நிலையில், ஜூன் மாதத்திலும் பொது பணவீக்கம் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, ரிசர்வ் வங்கி இம்மாதம் 26–ந் தேதி வெளியிட உள்ள பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 0.25 சதவீதம் உயர்த்தும் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஜூன் மாதத்தில்

## பொது பணவீக்கம் 9.44 சதவீதம்

எரிபொருள்கள் மற்றும் தயாரிப்பு பொருள்கள் விலை உயர்வால், ஜூன் மாதத்தில் பொது பணவீக்கம் 9.44 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பொது பணவீக்கம் மே மாதத்தில் 9.06 சதவீதமாக இருந்தது. ஏப்ரல் மாதத்திற்கான பொது பணவீக்கம் 8.66 சதவீதத்திலிருந்து 9.74 சதவீதமாக மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்திற்கான பொது பணவீக்கம், பங்கு வர்த்தக நிபுணர்களின் மதிப்பீட்டைக் காட்டிலும் சற்று குறைந்துள்ளது என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


மத்திய அரசு கடந்த மே மாதம் 24–ந் தேதி அன்று டீசல், சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியது. இதனையடுத்து, பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 15 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள எரிபொருள் மற்றும் மின்சாரம் பணவீக்கம் 12.32 சதவீதத்திலிருந்து 12.85 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 65 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள கார்கள், சிமெண்டு, உருக்கு, நுகர் பொருள்கள் உள்ளிட்ட தயாரிப்பு பொருள்கள் பணவீக்கம் 7.27 சதவீதத்திலிருந்து 7.43 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தினகரன்

**ஜூன் மாத பணவீக்கம் 9.4% ஆக உயர்ந்தது**

பதிவு செய்த நாள் 7/15/2011 2:13:54



புதுடெல்லி : கடந்த ஜூன் மாதத்தில் நாட்டின் ஒட்டுமொத்த விலைவாசி குறியீடான பணவீக்கம் 9.44 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது மே மாதத்தில் 9.06 சதவீதமாக இருந்தது.
கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பணவீக்கம் அபாய அளவுக்கும் அதிகமாகவே இருந்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்த கடன் மீதான வட்டியை ரிசர்வ் வங்கி அவ்வப்போது உயர்த்தியும் பலன் கிடைக்கவில்லை. அதாவது 2010 மார்ச் மாதம் முதல் இதுவரை 10 தடவை கடன் வட்டி உயர்த்தப்பட்டுள்ளது.

ஓராண்டுக்குப் பிறகு டீசல், சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் விலையை மத்திய அரசு கடந்த மாதம் உயர்த்தியது. இதனால் மே மாதத்தில் 9.06 சதவீதமாக இருந்த பணவீக்கம் 9.6 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டது. ஆனால் எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட குறைவாக 9.44 சதவீதமானது. பணவீக்க அளவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் தொழிற்சாலை உற்பத்தி பொருட்களின் விலை உயர்வு குறைவான அளவில் உயர்ந்ததே இதற்குக் காரணம். அதாவது மே மாதத்தில் 7.27 சதவீதமாக இருந்த இது ஜூன் மாதத்தில் 7.43 சதவீதமாக உயர்ந்தது.

பணவீக்கம் அதிகரித்து வருவது கவலை அளிப்பதாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். ரிசர்வ் வங்கியுடன் இணைந்து பணவீக்கத்தைக் கட்டுப்படு த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். இந்நிலையில், நிதிக்கொள்கையை ரிசர்வ் வங்கி வரும் 26ம் தேதி மறு ஆய்வு செய்கிறது. அப்போது கடன் வட்டி விகிதத்தை 0.25% உயர்த்தப்படலாம் என தெரிகிறது.

உணவு பணவீக்கம் 8.31%

இரண்டு வாரங்களாக தொடர்ந்து குறைந்து வந்த உணவு பணவீக்கம், கடந்த 2ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 8.31 சதவீதமாக உயர்ந்தது. ஜூன் 25ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் இது 7.61 சதவீதமாக இருந்தது. அதாவது ஒரே வாரத்தில் 0.7 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் (13.54%), பால் (12.39%), முட்டை, இறைச்சி மற்றும் மீன் (11.95%), வெங்காயம் (30.72%) ஆகியவற்றின் விலை அதிகம் உயர்ந்தன. எனினும், பருப்பு வகைகள் 8.46 சதவீதமும், உருளைக்கிழங்கு 2.56 சதவீதமும் சரிந்தன.

## டீ தூள் ஏலம் அமோகம்

பதிவு செய்த நாள் 7/15/2011 2:12:42




குன்னூர்: நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் நேற்று முன்தினம் தேயிலைத் தூள் ஏலம் நடந்தது. மொத்தம் 4 லட்சத்து, 66 ஆயிரத்து, 373 கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 2 லட்சத்து, 32 ஆயிரத்து, 419 கிலோவும், டஸ்ட் ரகம் 2 லட்சத்து, 33 ஆயிரத்து, 954 கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் பங்கேற்றதால், 90 சதவீதம் தேயிலைத்தூள் விற்பனையானது.

அனைத்து ரகத்திற்கும் ரூ.2 முதல் ரூ.4 வரை விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி, இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.47 முதல் ரூ.55 வரையிலும், உயர்வகை ரூ.60 முதல் ரூ.65 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.55 வரையிலும், உயர்வகை ரூ.65 முதல் ரூ.70 வரையிலும் விலை கிடைத்தது.

## முட்டை விலை மீண்டும் குறைப்பு

பதிவு செய்த நாள் 7/15/2011 2:13:6



நாமக்கல்: நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை 5 காசுகள் குறைக்கப்பட்டு, ஒரு முட்டை விலை 252 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை நிலவரம் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

ஆடி மாதம் பிறப்பதையொட்டி முட்டை விற்பனை தொடர்ந்து சரிந்து வருகிறது. பிற மண்டலங்களிலும் முட்டை விலை குறைக்கப்பட்டு வருகிறது. எனவே, நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலையை குறைக்க முடிவு செய்யப்பட்டது. முட்டை விலையில் 5 காசுகள் குறைக்கப்பட்டு, முட்டை பண்ணைக் கொள்முதல் விலை 252 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. இம் மாதத்தின் தொடக்கத்தில் முட்டை விலை 268 காசுகளாக இருந்தது. கடந்த 14 நாளில் 16 காசுகள் குறைந்துள்ளது.